padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

பகுதி II

36

# ஏரிக்கரை நிறுவனத்தால் ஆட்சி இழந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

'ஏரிக்கரை' பத்திரிகை நிறுவனம், ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பாகவும் அதனுடைய நலன்களுக்கு ஏற்ற விதத்திலும் உண்மைச் செய்திகளை திரிபுபடுத்தியும், பொய்ச் செய்திகளை உருவாக்கியும் வெளியிட்டு வந்தது. சிறந்த எழுத்தாளராகவும், நாவலாசிரியராகவும் இருந்த S.W.R.D பண்டாரநாயக்கா - அரசாங்க வானொலியை அதற்கு எதிரான பிரச்சாரப் பீரங்கியாக பாவித்து வந்தார். ஏரிக்கரை நிறுவனத்தின் பொய்ப் பிரச்சாரத்திற்கு உடனுக்குடன் வானொலியின் பதில் கொடுத்து அதன் தாக்குதல்களை சமாளித்து வந்தார். ஆனால் சிறீமாவோ பண்டார



நாயக்கவுக்கு அப்போது அத்தகைய திறமை இருக்கவில்லை. அவர் அந்த நிறுவனத்தை அரச உடமையாக்குவதன் மூலம் - அதன் கொட்டத்தை அடக்கி விடலாம் என்று எதிர்பார்த்தார். ஆனால், அதனுடைய பணப் பலம் ஆதிக்க பலம், ஏகாதிபத்திய பின்பலம் - ஆகியவற்றுக்கு முன்னால் (உலகின் முதல் பெண் பிரதமர் என்ற) அவரது அதிகார பலம் செல்லுபடியாகாது என்பது அவருக்கு தெரிந்திருக்கவில்லை. அவர் 'தங்க மூளை'க்காரர்களான சமசமாஜக் கட்சித் தலைவர்களது பேச்சைக் கேட்டு கொண்டு, 'ஆழம் தெரியாமல் காலை விட்டு' தனது ஆட்சிக்கு ஆபத்தை தேடிக்கொண்டார்.

ஏரிக்கரை நிறுவனம் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சிறீமாவோவின் ஆட்சியைத் தோற்கடிப்பதற்கான சகல வேலைகளிலும் இறங்கியது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்தவர்களுக்கு பணம் கொடுத்து அவர்களை ஐக்கிய தேசியக் கட்சியுடன் 'சேர்ந்து' கொண்டு பாராளுமன்றத்தில் அரசிற்கு எதிராக வாக்களிக்கும்படி அது தூண்டியது என்று குற்றம் சாட்டப்பட்டது. இக்குற்றச் சாட்டுக்கு ஆதாரமில்லை என்று கூறப்பட்டாலும் உண்மையில் அதுதான் நடந்தது என்பது பரவலான கருத்தாகும்.

ஏரிக்கரை நிறுவனத்தை சுவீகரிப்பதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே, அதாவது 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ம் திகதி, சிம்மாசனப் பிரசங்கத்திற்கான வாக்கெடுப்பில் அரசாங்கத்தில் இருந்து சி.பி.டி. சில்வா தலைமையில் ஒரு பிரிவினரும், புதிய சமசமாஜக் கட்சியின் உறுப்பினர்களான எட்மன் சமரக்கொடியும் மொறிஸ் பெர்னாந்துவும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் 'சேர்ந்து வாக்களித்ததால்' அரசாங்கம் தோல்வியடைந்தது. முதலாளித்துவ பாராளுமன்ற சம்பிரதாய நடைமுறைகளின்படி திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா தனது அரசாங்கத்தை கலைத்து தானும் பதவிவிலகி புதிய தேர்தலை நடத்துமாறு மகா தேசாதிபதியைக் கேட்டுக் கொண்டார்.

**சிறீமாவோ பண்டார நாயக்காவுக்கு அப்போது அத்தகைய திறமை இருக்கவில்லை. அவர் அந்த நிறுவனத்தை அரச உடமையாக்குவதன் மூலம் - அதன் கொட்டத்தை அடக்கி விடலாம் என்று எதிர்பார்த்தார். ஆனால், அதனுடைய பணப் பலம் ஆதிக்க பலம், ஏகாதிபத்திய பின்பலம் - ஆகியவற்றுக்கு முன்னால் (உலகின் முதல் பெண் பிரதமர் என்ற) அவரது அதிகார பலம் செல்லுபடியாகாது என்பது அவருக்கு தெரிந் திருக்கவில்லை. அவர் 'தங்க மூளை'க்காரர்களான சமசமாஜக் கட்சித் தலைவர்களது பேச்சைக் கேட்டு கொண்டு ஆழம் தெரியாமல் காலை விட்டு தனது ஆட்சிக்கு ஆபத்தை தேடிக்கொண்டார்.**

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் புதிய பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் தனியாக ஆட்சி அமைக்கும் அளவுக்கு எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இடம் கிடைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 66 இடங்களும், சுதந்திரக் கட்சிக்கு 55 இடங்களும் , தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு 17 இடங்களும் கிடைத்தன.

எனவே, அரசாங்கத்தை அமைப்பதற்காக இரண்டு சிங்கள பேரினவாதக் கட்சிகளும் தமிழரசுக் கட்சியினருடன் பேரம் பேசுவதில் ஈடுபட்டனர். தமிழரசுக் கட்சியினரும் திருமதி சிறீமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் மூட்டை கட்டி பரணில் எறிந்த 'தமிழுக்கு சம அந்தஸ்து, தமிழருக்கு ஆட்சியில் உரியபிரதிநிதித்துவம்' என்கின்ற கோரிக்கைகளை பழைய படி தேடி எடுத்து தூசி தட்டி அரசியல் பேர வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

**அரசாங்கத்தை அமைப்பதற்காக இரண்டு சிங்கள பேரினவாதக் கட்சிகளும் தமிழரசுக் கட்சியினருடன் பேரம் பேசுவதில் ஈடுபட்டனர். தமிழரசுக் கட்சியினரும் திருமதி சிறீமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் மூட்டை கட்டி பரணில் எறிந்த 'தமிழுக்கு சம அந்தஸ்து, தமிழருக்கு ஆட்சியில் உரியபிரதிநிதித்துவம்' என்கின்ற கோரிக்கைகளை பழையபடி தேடி எடுத்து தூசி தட்டி அரசியல் பேர வியாபாரத்தில் ஈடுபட்டனர்.**

தங்களைப் பிடித்து சிறையில் அடைத்து இம்சைப்படுத்திய சிறீமாவோவுடன் பேரம் பேச அவர்கள் விரும்பவில்லை. வர்க்க அடிப்படையில் தங்களுடைய நலன்களை பிரதிபலிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேரம் பேசுவதிலேயே அவர்கள் அக்கறை செலுத்தினார்கள். சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி இரண்டுமே பௌத்த சிங்கள பேரினவாதக் கட்சிகள் என்பதை தெரிந்து கொண்டும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியைவிட ஐக்கிய தேசிய கட்சி பரவாய் இல்லாத கட்சி. இனவாதம் குறைந்த கட்சி என்ற அபிப்பிராயத்தை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்க முனைந்தனர்.

ஆயினும் தமது அரசியல் உரிமைப் பேர நாடகத்தை தமிழ் மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கி விட்டார்கள் என்கின்ற எச்சரிக்கை உணர்வும் அவர்களுக்கு இருந்தது. அதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 'அரசாங்கம் அமைக்க ஆதரவு வழங்குகின்றோம். ஆனால், (ஐக்கிய தேசியக் கட்சி) தமிழர்களின் பிரச்சனையை தீர்க்கும் வரை எ[illegible] பாராளுமன்ற உறுப்பினர்கள் மந்திரி சபையில் சேர்ந்து கொள்ள மாட்டார்கள்' என்று தமிழரசு கட்சித் தலைவர்கள் அறிவித்தனர். ஆனால், அதே நேரத்தில் தமது கட்சியைத் சேர்ந்த மு. திருச்செல்வத்தை மேல் சபை (செனட்) உறுப்பினர் ஆக்கி மந்திரி சபையில் பங்கெடுக்க வைத்தனர்.

உண்மையில் இந்த நடவடிக்கை சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆலயப் பிரவேசம் செய்ய அனுமதி மறுக்கும் ஆலய நிர்வாகத்தைப் பார்த்து, அதே நிர்வாகத்தில் பங்கெடுக்க தயாராக உள்ள ஒருவர், நீங்கள் இந்த மக்களை ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கும் வரை, நான் முன் வாசலால் வந்து உங்கள் நிர்வாகத்தில் பங்கெடுக்க மாட்டேன். பக்க வாசலால் வந்து பங்கெடுத்துக் கொள்கின்றேன் என்று சொல்வதற்கு ஒப்பான ஒரு ஏமாற்று நடவடிக்கையாக இருந்தது.

டட்லி சேனநாயக்காவின் தலைமையில் அமைந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசு தன்னை இனவாதம் அற்ற ஒரு தேசிய அரசாக சொல்லிக் கொண்டது. அதற்கு ஆதாரமாக வடக்கு - கிழக்குத் தமிழர்கள் சார்பில் மு. திருச்செல்வமும், மலையக தமிழர்கள் சார்பில் எஸ். தொண்டமானும், கரையோரச் சிங்களவர்கள் சார்பாக W. தஹநாயக்க, சி.பி.டிசில்வா முதலானோரும் கண்டியச் சிங்களவர்கள் சார்பில் ஜே.ஆர். ஜயவர்த்தனா, டட்லி சேனநாயக்கா முதலானோரும் மந்திரிகளாக இருந்தது சுட்டிக் காட்டப்பட்டது.

1966-ம் ஆண்டின் முற்பகுதியில் டட்லி சேனநாயக்கா தமிழ் மொழிக்கு அதிகார அந்தஸ்து வழங்குவது, தமிழ் மக்கள் வாழும் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை உள்ளடக்கிய பிராந்திய சபை ஒன்றை அமைப்பது அதற்கு கல்வி - குடியேற்றம் நிர்வாகம் தொடர்பான அதிகாரங்களை வழங்குவது என்பன தொடர்பாக தமிழரசு கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார். டட்லி - செல்வா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்ட இந்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த சிலர் திரைமறைவில் இதை நடைமுறைப்படுத்த முடியாத சூழ்நிலையை தோற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருந்தனர். டட்லி சேனநாயக்காவும் இதை அறிந்தும் தடுக்க முயற்சி எடுக்க முடியாமல் இருந்ததாக பிரபல இடதுசாரி தலைவரான சண்முகதாசன் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது, 'தமிழ் மக்களின் நியாயமான பிரச்சனைகளை தீர்க்கும் பட்சத்தில் பௌத்த சிங்கள இனவாதிகளின் அச[illegible]ண்டி ஏற்படும் என்று பயந்து போன டட்லி சேனநாயக்கா, ஒரு புறத்தில் தமது [illegible]துக் கொண்டிருக்கும் தமிழரசு கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டு, மறுபுறத்தில் அப் பேச்சுவார்த்தையின் முடிவுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்று கூறி கைவிடத்தக்க ஒரு சூழ்நிலையையும் மறைமுகமாக உருவாக்கினர்.

1966-ம் ஆண்டு ஜனவரி மாதக் கடைசியில் இந்தப் பேச்சு வார்த்தை முடிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்



தில் கொண்டுவருவதற்கான அறிவித்தலை டட்லி சேனானயக்கா செய்தபோது, 1966 ஜனவரி 8-ம் திகதி சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனுடைய கூட்டாளிகளான சிங்கள இடதுசாரி கட்சிகளும் இணைந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் கொழும்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றையும் நடாத்தினர்.

- நக்கீரன்

படிப்பகம்